## 10.7 மாவட்டத் திட்டக் குழு ஆற்ற வேண்டிய பணிகள்

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (சி4) துறை

அரசாணை (நிலை) எண். 119 நாள் : 15.9.2006

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.327 ஊரக வளர்ச்சித் துறை நாள் 14.11.1997
2. அரசாணை (நிலை) எண்.15 ஊரக வளர்ச்சித் துறை நாள் 22.1.2001
3. மாநில திட்டக்குழு உறுப்பினர் செயலர் அவர்களில் நே. மு.க எண்.4366/ மா.தி.கு/ மா.தி 2001 நாள் 10.1.2002 22.4.2003 மற்றும் 25.1.2003 நாளிட்ட கடிதம்
4. ஊரக வளர்ச்சி இயக்குநர் கடித எண்.6811/2002 ஊ.அநி 1. நாள் 9.5.2003

**ஆணை**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 241ல் உட்பிரிவு (1)ல் கண்டுள்ளபடி ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்டத்தில் உள்ள மாவட்ட ஊராட்சிகள் / ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் / ஊராட்சிகள் பேரூராட்சிகள் / நகராட்சி மன்றங்கள் / மாநகராட்சிகள் ஆகியவற்றால் தயாரிக்கப்பட்டுள்ள திட்டங்களை ஒருங்கினைப்பதற்காகவும் மற்றும் மாவட்டம் முழுவதற்கும் ஒட்டு மொத்தமாக வரைவு வளர்ச்சித் திட்டம் ஒன்றை தயாரிப்பதற்காகவும் மாவட்ட திட்டமிடும் குழு ஒன்றை மேலே படிக்கப்பட்டவை 1 மற்றும் 2–ல் உள்ள அரசு ஆணைகளில் அனைத்து ம்ாவட்டங்களிலும் (சென்னை நீங்கலாக) அரசு அமைத்துள்ளது.

அம்மாவட்டதிட்ட குழுக்கள் ஆற்றவேண்டிய பணிகள் தொடர்பாக மாநில திட்டக்குழு உறுப்பினர் செயலர் மேலே படிக்கப்பட்டவை மூன்றில் உள்ள நேர்முக கடிதத்தில் அரசிற்கு செயற்குறிப்பு அனுப்பியுள்ளார் அச்செயற்குறிப்பு ஊரக வளர்ச்சி இயக்குநருடன் கலந்தலோசிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் மாவட்டத்திட்டக்குழு ஆற்றவேண்டிய பணிகளை கீழ்கண்டவாறு நிர்ணயித்து அரசு ஆணையிடுகிறது.

மாவட்ட திட்டக்குழுவின் பணிகள்

1. மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரிப்பதற்காக மாவட்டத்தின் இயற்கை வளம் மற்றும் மனித வளம் சம்பந்தமான அனைத்து விவரங்ளைச் சேகரித்து தொகுத்து தகவல் தளம் அமைத்தல் வரைபடம் ஒன்றைத் தயாரித்து மாவட்டத்தின் வள ஆதார வாய்ப்புகளை மதிப்புடுதல்.
2. ஊரக மற்றும் நகர்பகுதி உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் சார்புத் துறைகள் (டுனைநே னுநயீயசவஅநவே) தயாரித்த பொருளாதார வளர்ச்சி மற்றும் நலத்திட்டங்களைத் தொகுத்தல். மாநில அரசு வழங்கிய வழிகாட்டி நெறிமுறைகளைக் கருத்தில் கொண்டு மாவட்ட திட்டக்குழு விவாதித்து மாவட்டம் முழுமைக்குமான வரைவு வளார்ச்சித் திட்டம் ஒன்றைத் தயாரித்தல்.
3. ஊரக மற்றும் நகர்பகுதி உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையில் பணிகள் மேற்கொள்ளப்படும் இடம் சார்ந்த திட்டமிடுதல்(ளுயீயவயைட ஞடயழேைபே) நீர் மற்றும் ஏனைய இயற்கை வளங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் உட்பட பொதுவான நலன் பற்றி விவாதித்து ஒருங்கிணைந்து அடிப்படை வசதி வளர்ச்சி மற்றும் சுற்றுச் சூழலை பேணிப்பாதுகாக்க உதவுதல்.
4. மாவட்டதின் வளர்ச்சி வேகத்தைக்குறைக்கும் கூறுகளைக் கண்டறிதல் மற்றும் மாவட்டத்திற்கான குறிப்பிட்ட வளர்ச்சி உத்திகள்/ திட்டங்கள் / செயல்திட்டங்கள் ஆகியவற்றை உருவாக்குதல்.
5. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் உட்பட செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டங்கள் / பணிகள் செயலாக்கத்தை கண்காணித்து ஆய்வு செய்தல்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்